Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-61 மாசி,2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00



## தாயக ஒருமைப்பாட்டை உணர்த்திய வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி

7 வது ஆண்டில் நிமிர்வு

- 1985 தைப்பொங்கல் பிரதிபலிப்புகள்!
- இலகுவழியில் மட்கு எரு தயாரிப்பது எப்படி?
- ஐ.நா மனித உரிமைகள் சபையில் ஈழத்தமிழர் பிரச்சனை





ஆய்வு – அறிவு – நிமிர்வு

# இயற்கைவழியில் மட்கு எரு தயாரிப்பது எப்படி?



தொகுப்பு - துருவன்

புதிய வெளிச்சம் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கையின் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 2023 தை மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் இருநாள் இயற்கை விவசாயப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. அதில் தமிழ்நாடு வேளாண் அறிஞர் பாமயன் அவர்கள் ஒரு பயிற்றுனராக கலந்து கொண்டார். எங்கள் சூழலில் உள்ள இயற்கை கழிவுகளை எளிய முறையில் மட்க வைத்து கூட்டெரு/மட்கு எரு (compost) தயாரிப்பது எப்படி என்று செய்முறையுடன் தெளிவாக விளக்கி இருந்தார்.

மட்கு எரு தயாரிப்பு அதாவது கறுப்பு வடிவிலான இயற்கை உரம் தயாரிப்பை சிறிது கடினமானதாகவே எல்லோரும் நினைத்திருப்போம். உண்மையில் அதன் செயன்முறையை பார்த்த போதுதான் அதனை எவ்வளவு இலகு வழியில் உற்பத்தி செய்ய முடியும் என்பது தெரிந்தது.

ஒரு மரத்தடியில் கீழ் நிழல் பாங்கான மழைநீர் தேங்கி நிற்காத, சமதரையாக உள்ள 12 X 4 அளவுள்ள இடத்தை தெரிவு செய்து அதன் நான்கு மூலைகளிலும் தடிகளை நட்டு அதில் கயிற்றை கட்டி அதனுள் படை படையாக இயற்கையாக கிடைக்கும் கழிவுகளை போட வேண்டும். இலைகள், சருகுகள், தாவரங்களின் வேர்கள், தண்டுகள், புல் என மீதமாக உள்ள தாவரக்கழிவுகள், ஆட்டெரு, மாட்டெரு, கோழிஎரு போன்றவற்றில் உங்கள் சூழலில் கிடைப்பவற்றை எடுத்து படிப்படியாக போட வேண்டும். பூக்காத பாதீனியம் செடிகளையும் இதனுள் போடலாம்.


30 பங்கு தாவரக்கழிவுக்கு ஒரு பங்கு விலங்கு கழிவுகள் (30:1) என்ற அளவிலும் போடலாம். விஞ்ஞான ரீதியில் கூறினால் கார்பனையும் நைட்ரஜனையும் சேர்த்தால் மட்கு எரு தயார். விலங்கு கழிவுகள் அதிகமாக இருந்தால் அதிகமாகவும் போட முடியும். 30 பங்கு தாவரக்கழிவின் மேல் ஒரு பங்கு சாணத்தை கரைத்து தெளித்துவிட்டால் மட்காக மாறிவிடும்.

ஒரு மாட்டிலிருந்து ஒரு நாளைக்கு 10 கிலோவுக்கும் குறையாத சாணி கிடைக்கும். வருடத்தில் 300 நாள் என்று பார்த்தாலே 300X10 = 3000 கிலோ சாணி கிடைக்கும். ஒரு நாளைக்கு 30 கிலோ தாவரக்கழிவு என்று பார்த்தால் 300X30 = 9000 கிலோ கிடைக்கும். அவை மட்கும் போது மூன்றில் ஒரு பகுதி மட்கிய எருவாக கிடைக்கும். அதாவது சராசரியாக 4000 கிலோ எரு கிடைக்கும்.

முதலில் தாவரக்கழிவுகளை ஆறு அங்குலம் வரைக்கும் பரவ வேண்டும். அதன் மேல் மூன்று அங்குலத்திற்கு விலங்கு கழிவுகளை ஒரு படையாக பரவ வேண்டும். கண்ணாடி, இரும்பு, பிளாஸ்டிக் தவிர அனைத்தையும் இதனுள் போடலாம். ஒவ்வொரு படை இடைவெளியிலும் நாட்டு

மாட்டின் சாணத்தை தண்ணீரில் கலந்து நன்றாக ஈரலிக்குமாறு தெளிக்க வேண்டும். குறித்த ஒழுங்கில் ஐந்து அடி வரை தாவரக் கழிவுகளையும், விலங்கு கழிவுகளையும் மாறி மாறி பரவி இடைக்கிடை சாணத்தண்ணீரை நன்றாக தெளித்து, நான்கு அடிக்கு மேல் வந்ததும் மீண்டும் சாணத்தண்ணீரை நல்ல ஈரலிப்பாக தெளித்து பின் நீரையும் நன்றாக கீழே வழிந்தோடுமாறு தெளித்து பழைய சாக்கு அல்லது வேறு பொருள்களால் மூடி விடவும். கோழி, நாய் போன்ற விலங்குகள் கிளறாமல் இருக்கவே மூடப்படுகிறது.

பயிற்சிப் பட்டறை நடைபெற்ற பண்ணை சூழலில் இருந்த புல் பூண்டுகள், தாவரக்கழிவு கள், வாழை சருகுகள், சாணம், சீமைக்கிளுவை தடிகள், தென்னோலைகள் என அனைத்தும் இதில் சேர்க்கப்பட்டதால் அரை மணிநேரத்தில் பண்ணை பகுதியும் சுத்தமாகியது. இந்த படுக்கைக்கு ஒவ்வொரு நாளும் தண்ணீர் தெளிக்க வேண்டும். அப்போது தான் ஈரலிப்பாக இருந்து நுண்ணுயிர்களின் தொழிற்பாடு வேகமாக நடக்கும். விரைவாக மட்கும். இந்த படுக்கைக்கு மேலே நுண் நீர்ப்பாசன முறைகளை செய்து விட்டால் இலகுவாக தண்ணீர் விடக் கூடியதாக இருக்கும். இதனை ஒவ்வொரு நாளும் கிண்டி கிளறி விட வேண்டிய தேவையில்லை. இது தான் மிகவும் இலகுவான மட்கும் பசளை தயாரிப்பு முறை ஆகும்.





15 - 20 நாட்களில் இந்த படுக்கையின் சூடு அதிகமாகி பின் குறையும். அதன் பின் இதனுள் மண்புழுவை விட்டு விட்டால் இது மண்புழு உரமாகவும் மாறிவிடும். குறிப்பிட்ட காலப்பகுதியை விட வேகமாக மட்கும் செயற்பாடு நடக்கும். மண்புழுக்களை விடும் போது அருகருகே இன்னும் பல படுக்கைகளை உருவாக்குவது நல்லது. ஏனெனில் மண்புழு ஒரு படுக்கையில் தனக்கு உணவு கிடைக்கும் வரையே அங்கே இருக்கும். அங்கு தனக்கான உணவு முடிந்த பின்பு பக்கத்தில் உள்ள படுக்கைக்கு நகர்ந்து செல்லும்.

120 நாளில் இந்த பொருள்கள் எல்லாம் மட்கி கறுப்பு உரம் தயாராகி விடும். உங்கள் மண்ணில் நுண்ணுயிர்கள் அதிகமாக இருந்தால் இன்னும் விரைவாக மட்கும் உரம் தயாராகி விடும். ஒரு ஏக்கருக்கு ஐந்து டன் மட்கும் உரம் தேவைப்படும். வளம் குறைந்த மண்ணாக இருந்தால் இன்னும் கூடுதலாக மட்கும் உரம் தேவைப்படும். உங்களுக்கு இயற்கை உரம் அதிகமாக தேவைப்படின் இந்த இயற்கை பசளை தயாரிப்பு படுக்கைக்கு அருகில் அடுத்தடுத்து இன்னும் பல படுக்கைகளை தயார் செய்தால், குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து பசளைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

# ஏழாவது ஆண்டில் நிமிர்வு

நிமிர்வு சஞ்சிகை தமிழ் மக்களின் பிறப்புரிமையின் அடிப்படையில் அவர்களுக்கு உரித்தான தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய விடயங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. குறித்த விடயங்களை வலியுறுத்தி அரசியல், சமூக, பொருளாதார கோணங்களில் ஆராய்ந்து அறிவுத் திரட்டலை செய்யும் ஊடகமாக இருந்து வருகிறது.

ஈழத்தமிழ் மக்களின் பூகோள அமைவிடம் அதனை தொடர்ந்து வரும் புவிசார் அரசியலின் முக்கியத்துவம் தொடர்பிலும், சிங்கள தேசம், இந்தியா, சர்வதேச உறவுகள் தொடர்பிலும், கல்வி மருத்துவம் சார்ந்தும், தேசியத்தின் அடிப்படைகளில் ஒன்றான சூழலியலை சிறந்த முறையில் பேணும் இயற்கை விவசாயம் தொடர்பிலான விடயங்கள், எங்கள் மண்ணுக்கே உரித்தான சிறுகைத்தொழில் முயற்சிகளையும் இனங்கண்டு இவை தொடர்பிலான பல்வேறு விடயங்களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் தேசம் சார்ந்து தொலைநோக்கு கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தும் ஊடகங்கள் குறைந்து வரும் நிலையில் அந்தப் பணியை எடுத்து செய்வதில் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்ட போதிலும் நிமிர்வு முன்னின்று வருகிறது. இன்னும் பல்வேறு விடயப் பரப்புகளை ஆராய்ந்து, பல்வேறு புதிய கருத்துருவாக்கிகளையும் இணைத்துக் கொண்டு பயணிக்க நிமிர்வு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான சரியான அரசியல் தீர்வு, அதனை அடையும் வழிவகைகள், அதற்கான அரசியல் வேட்கையை தக்கவைத்துக் கொள்வது என்பவை ஒரு புறம், மறு புறம் இன்றும் தொடரும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வது தொடர்பிலும், ஏற்கனவே நடந்த படுகொலைகள், திட்டமிட்ட அழிப்புகளை முறையாக ஆவணப்படுத்தவும் வேண்டியுள்ளது. இன்னொரு பக்கம் இனப்பிரச்சினையை தீர்க்க முன்வராத சிறீலங்கா அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் இன்று நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியில் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் அதிகம் பேசப்பட வேண்டியுள்ளது.

தற்போது தமிழர் தாயகத்தில் எம் சூழல் அளவுக்கதிகமான இரசாயன பாவனைகளால் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. இயற்கை விவசாயத்தை திறம்பட முன்னெடுக்கக் கூடிய சகல ஏதுநிலைகளும் உள்ள நிலையில் அளவுக்கதிகமான நச்சு பாவனை எதிர்காலத்தில் புற்றுநோய் வைத்தியசாலைகளை அதிகரிக்கவே செய்யும். அளவுக்கதிகமான நுகர்வால் நீர்வளம் குறைந்து செல்கிறது. பல்வேறு காரணிகளால் தண்ணீர் மாசடையும் தன்மையும் அதிகரித்து வருகிறது. இவை தொடர்பிலும் சம நேரத்தில் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டியுள்ளது. இல்லாவிடில் இங்குள்ள சூழல் ஆர்வலர் கேட்டது போல இப்படியே போனால் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாத தாயகத்தை வைத்து என்ன செய்வது என்ற கேள்விக்கு விடை தேட வேண்டி வரும். இங்குள்ள தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் சூழலியல் தேசியம் தொடர்பில் எவ்வித புரிந்துணர்வும் இல்லாதவர்களே உள்ளனர். இவ்வாண்டு சூழலியல் தேசியம் தொடர்பிலும் அதிகம் பேச வேண்டியுள்ளது.

இலங்கைத்தீவில் காலம்காலமாக ஒடுக்கப்பட்டு வரும் மற்றைய தேசிய இனங்களுடனான தமிழ் மக்களின் உறவுகள் தொடர்பில் வலுவான கருத்துருவாக்கங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இன்னும் நாங்கள் ஆராய்வதற்கும், அறிந்து கொள்வதற்கும், மக்கள் மத்தியில் பரப்புவதற்கும், கருத்துருவாக்கங்களை பல்வேறு நிலைகளில் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இக்கருத்துருவாக்கங்கள் ஊடாக தமிழ்த் தேசிய அரசியலில் மக்களை தக்கவைத்துக் கொள்வதுடன் எதிர்காலம் குறித்தும் தூரநோக்கிலான சிந்தனையை ஏற்படுத்த முடியும். இதனை நோக்கி நிமிர்வு தொடர்ந்து பயணிக்கும்.

-செ. கிரிசாந்-




# 1985 தைப்பொங்கல் பிரதிபலிப்புகள்!

தக்ஷிலா ஸ்வர்ணமாலி - தமிழாக்கம் : நிமிர்வு

இலங்கை அரசுகளுக்கு எதிராக தென்னிலங்கை அவ்வப்போது போராட்டங்களை நடத்தி வருகிறது. ஆனால், வடக்கு இலங்கை அரசுக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசால் வெட்கமின்றி நடாத்தப்பட்ட "தேசிய தைப்பொங்கல்" பண்டிகைக்கு வடக்கு எதிர்ப்பைக் காட்டியது. இந்த எதிர்ப்பானது, தென்னிலங்கை செய்வது போன்று அரசாங்கத்திற்கு எதிரான குறுகிய எதிர்ப்பு அல்ல என்பதையும், சிங்கள மேலாதிக்க அரசிற்கு எதிராக அவர்கள் எப்பொழுதும் போராடுவதையும் தெற்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் 38 ஆண்டுகளுக்கு முன்பு இந்த தைப்பொங்கல் திருநாளில் தமிழ் மக்கள் மீது அரச பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியபோது நடந்த தைப்பொங்கல் அவலத்தை நாம் நினைத்துப் பார்க்கிறோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு - வவுனியா வீதியில் அமைந்துள்ள முள்ளியவளை கிராமம், வளமான நிலப்பரப்பைக் கொண்ட ஒரு தொன்மையான தமிழ் கிராமம். அதன் தொன்மையான நாட்டுப்புற கலாச்சார அம்சங்கள் நீண்ட காலமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 16.01.1985 தைப்பொங்கலுக்கு மறுநாளும் ஒரு பண்டிகை நாள். தைப்பொங்கல் என்பது சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் பண்டிகை. மறுநாள் விவசாயிகளுக்கு வாழ உதவும் பண்ணை விலங்குகளை கௌரவிக்கும் பண்டிகையாகும். அன்றைய தினம் அதிகாலை 4 மணியளவில் முள்ளியவளை கிராமம் இலங்கை இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது.

17 கிராமவாசிகளை இராணுவம் கைது செய்தது. அவர்களில் ஒருவர் கர்ப்பிணிப்பெண். மற்றொருவர் மூன்று பிள்ளைகளின் இளம் தாய். கிராமத்தை விட்டு வெளியேறுவதற்கு முன், இராணுவம் பல வீடுகளை எரித்தது. சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு, கிராம மக்கள் பல துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்டனர். கைது செய்யப்பட்ட 17 பேரும் கொல்லப்பட்டதாக வதந்திகள் பரவ ஆரம்பித்தன. கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த வதந்தியால் ஒடிந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அந்த தகவலை அவர்களுக்கு தெரிவிக்காமல் கிராம மக்கள் தாமதப்படுத்த முயன்றனர்.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவு நகரை நோக்கி நகர ஆரம்பித்தன. தங்கள் உறவுகளை தேடிய உறவினர்கள் அந்த இராணுவ வாகனங்கள் செல்வதை பார்த்தனர். அவர்களது அன்புக்குரியவர்கள் மறுநாள் வரை திரும்பி வராததால், உள்ளூர் சமாதான நீதவான் தியாகராஜாவுடன் அவர்கள் முல்லைத்தீவு இராணுவ முகாமுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் உடல்கள் தரையில் கிடப்பதைப் பார்த்தனர். இறந்த உடல்களில் ஆடைகள் எதுவும் இல்லை. கை, கால்கள் மற்றும்

> **“இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று உறுதிமொழியில் கையெழுத்திடுமாறு இராணுவம் உத்தரவிட்டது”**

தலைகளில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. நிர்வாணமாக இருந்த அந்த சடலங்களில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான பல அறி குறிகள் இருந்தன. ஒரு பெண்ணின் உடலில் பல சிகரெட் தீக்காயங்கள் இருந்தன. தமது அன்புக்குரியவர்களின் உடல்களை எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு உறவினர்கள் கோரியபோது, இறந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று உறுதிமொழியில் கையெழுத்திடுமாறு இராணுவம் உத்தரவிட்டது. உறவினர்கள் மறுத்ததால், சடலங்களை அவர்களிடம் ஒப்ப டைக்க இராணுவத்தினர் மறுத்துவிட்டனர்.

பல வருடங்களின் பின்னர் முள்ளியவளை கிராமத்தைச் சேர்ந்த தவரத்தினம் திலகவதி கூறுகிறார்: “ஜனவரி 16, 1985 இல், இலங்கை இராணுவம் எனது கணவர் மற்றும் எனது மகன் உட்பட 17 பேரை கைது செய்து காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்றது. இராணுவம் பல வீடுகளை எரித்ததுடன், எமது சொத்துக்களையும் சூறையாடியது.”

இதுகுறித்து அந்த கிராமத்தைச் சேர்ந்த புஷ்பராணி கூறும்போது, “எங்கள் வீட்டுக்குள் புகுந்த இலங்கை இராணுவம் எனது அண்ணன், அம்மாவை கைது செய்து பின்பு இருவரையும் கொன்று விட்டது. அவர்கள் புலிகள் என்பதால் கொல்லப்பட்டதாக இராணுவம் கூறியது. விஜயகுமாரி என்ற ஏழு மாத கர்ப்பிணியையும் கொன்று விட்டது. இச்சம்பவத்தால் இங்குள்ள பலர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். தைப் பொங்கலுக்கு மறுநாள் இது நடந்ததால் நாங்கள் இன்றும் தைப்பொங்கலை கொண்டா டுவது இல்லை.” இலங்கையால் படுகொலை செய்யப்பட்ட...

| பெயர் | வயது |
|---|---|
| நவரட்ணம் தயாபரன் | 15 |
| பிலிப்பையா யோகராசா | 17 |
| தம்பையா விவேகானந்தம் | 17 |
| மார்க்கண்டு தட்சணாமூர்த்தி | 19 |
| குமாரசாமி விஜயகுமாரி | 27 |
| தம்பையா பாலசுப்ரமணியம் | 30 |
| நாகரத்தினம் சிறீஸ்கந்தராசா | 35 |
| சின்னப்பன் அன்னலட்சுமி | 35 |
| செல்லத்துரை குமாரசாமி | 35 |
| செல்லத்துரை நவரட்ணம் | 38 |
| சுப்பன் சின்னன் | 40 |

ஆகியோர் இச்சந்தர்ப்பத்தில் மரியாதை யுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். அவர் கள் உட்பட இலட்சக்கணக்கான தமிழ் மக்க ளின் தியாகங்களுக்கு நீதி வழங்கப்பட வேண் டும். குறைந்தபட்சம் முற்றுப்பெறாத தமிழ் தேசி யப் போராட்டத்தின் அரசியல் அபிலாஷை களையாவது நிறைவேற்றுவதற்கு சிங்கள சமூ கம் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

(மனித உரிமைகள் தொடர்பான வடக்கு கிழக்கு செயலகத்தால் வெளியிடப்பட்ட 1956 - 2008 தமிழர் படுகொலைகள் என்ற புத்தகத்திலிருந்து...)

**தக்ஷிலா ஸ்வர்ணமாலி - தமிழாக்கம் : நிமிர்வு, நன்றி : (www.nivahal.com)**

# ஐ.நா மனித உரிமைகள் சபையில் ஈழத்தமிழர் பிரச்சனை – (பகுதி – 2)

ஐ.நா. வில் ஈழத்தமிழர் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளையும் அவற்றைத் தொடர்ந்து சிறிலங்கா அரசை ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்திற்கு முன்னர் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாகவும் சென்ற இதழில் கதைத்து இருந்தோம். மேலும் சிறிலங்கா அரசை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அதன் செயற்பாடுகளை விளங்கிக் கொள்ளுவது தொடர்பாகவும் பேசி இருந்தோம். அதன் தொடர்ச்சியை இந்த இதழில் தருகிறோம்.




தொகுப்பு - லிங்கம்

பொது அமர்வில் ICJ தனது ஆலோசனைக் கருத்தை வழங்குவதன் மூலம் ஆலோசனை நடவடிக்கைகள் முடிவடையும். அடிப்படையில் இத்தகைய கருத்துக்கள் ஆலோசனைகள் மட்டுமே. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் போலல்லாமல், அவை சட்ட ரீதியாக ஒருவரையும் கட்டுப் படுத்தாது. ஆலோசனை கோரிய ஐ.நாவின் உறுப்பு நிறுவனம் அல்லது அமைப்பு, கருத்தை எடுத்துக் கொண்டு தனக்கு ஏற்றவாறு செயல்படுவதற்கு சுதந்திரம் உள்ளது. அல் லது அது எந்த நடவடிக்கையையும் எடுக்கா மல் இருப்பதற்கும் சுதந்திரம் உள்ளது. எவ்வாறாயினும், சில கருவிகள் அல்லது விதிமுறைகள் நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்துக்கு சட்ட பலத்தை கொடுக்க முடியும். உதாரணமாக, ஐ.நா. சபையின் சலுகைகள் மற்றும் விலக்குகள் மீதான ஆலோசனைகளை கூறலாம்.

ICJ இன் ஆலோசனைக் கருத்துக்கள் அதன் அதிகாரம் மற்றும் கௌரவத்துடன் தொடர்புபட்டவை. அதன் ஆலோசனையை கோரிய நிறுவனம் அந்த ஆலோசனையை அங்கீகரிப்பதாக எடுக்கும் முடிவு அந்தக் கருத்தை ஒரு சர்வதேச சட்டமாக வரித்துக் கொள்ளும் முடிவாகவே கருதப்படும்.

ஈழத்தமிழர் பிரச்சனையை எடுத்துக் கொண்டால், ICJ சிறிலங்கா அரசை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆலோசனையை வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு முதலில் ICJ யிடம் இந்த வழக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனை ஐ.நா.வின் உறுப்பு நிறுவனமான HRC செய்ய வேண்டும் என்று ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். HRC இதனை செய் யாமல் இழுத்தடிப்பதுதான் இங்குள்ள பிரதான சிக்கல். இதற்கு HRC இல் இருக்கும் நாடுகளில் பெரும்பான்மையானவற்றின் ஆதரவு தேவைப்படும். இதுவரை ஈழத்தமிழருக்கு அந்தப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை என்பதுதான் பிரதானமான புள்ளி. இந்த நிலைமையை மாற்ற என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இன்று ஈழத்தமிழர்கள் கலந்தாலோசிக்க வேண்டிய விடயம்.

I
C
C

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) உருவாக்கத்திற்கான அடிப்படை சாசனமாகிய ரோம் சாசனம் இந்த நீதிமன்றத்திற்கு பிரதானமாக குற்றங்களை விசாரிப்பதற்கு சட்ட உரிமையை வழங்கி உள்ளது.

முதலாவது, இனப்படுகொலை: இனப்படுகொலை குற்றமானது ஒரு தேசிய இனம், இனம் அல்லது மதக் குழுவை அதன் உறுப்பினர்களைக் கொல்வதன் மூலம் அல்லது வேறு வழிகளில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செயற்படுவது என்று வகைப்படுத்தப்படுகிறது.

இந்த செயற்பாடுகள், ஒரு மக்கள் கூட்டத்தின் உறுப்பினர்களுக்கு கடுமையான உடல் அல்லது மனத் தீங்கு விளைவிப்பது, முழு அல்லது பகுதியாக அவர்களுக்கு அழிவைக் கொண்டு வருவதற்கு திட்டமிட்ட ரீதியில் அவர்களின் வாழ்க்கைச் சூழலை மாற்றுவது, அவர்களின் பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளை செய்வது, அல்லது அவர்களின் குழந்தைகளை வலுக்கட்டாயமாக வேறு மக்கள் கூட்டத்திற்கு மாற்றுவது என்பவற்றை உள்ளடக்கும்.

இரண்டாவது, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்: இவை எந்தவொரு குடிமக்களுக்கும் எதிரான பெரிய அளவிலான தாக்குதலின் ஒரு பகுதியாக செய்யப்படும் கடுமையான குற்றங்களை குறிக்கும். ரோம் சட்டத்தில் 15 வகையான மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. கொலை, பாலியல் வன்முறை, சிறைப்பிடித்தல், கட்டாயமாக காணாமல் போகச் செய்தல், அடிமைப்படுத்துதல் - குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் ரீதியாக அடிமைப்படுத்தல், சித்திரவதை செய்தல், நிறவெறிப் பாகுபாடு மற்றும் நாடு கடத்தல் போன்ற குற்றங்கள் இவற்றுள் அடங்கும்.

மூன்றாவது, போர்க்குற்றங்கள்: ஆயுத மோதல்களில் ஜெனீவா உடன்படிக்கைகளை மீறுதல் போர்க்குற்றம் என்று வகைப்படுத்தப்படும். உதாரணமாக, சிறுவர்களை படைகளில் சேர்ப்பது, பொதுமக்கள் அல்லது போர்க் கைதிகளை கொல்வது அல்லது சித்திரவதை செய்வது, மருத்துவமனைகள், வரலாற்று நினைவுச்சின்னங்கள் மற்றும் கல்வி, மதம், கலை, அறிவியல் அல்லது தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டிடங்களை வேண்டுமென்றே தாக்குவது போன்ற செயற்பாடுகள் இவற்றுள் அடங்கும்.

நான்காவது, ஆக்கிரமிப்பு: இது ஒரு நாடு தனது இராணுவத்தை மற்றொரு நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு அல்லது சுதந்திரத்திற்கு எதிராக பயன்படுத்துவதாகும். 2010இல் உகண்டாவின் கம்பாலாவில் நடந்த ரோம் சட்டத்தின் முதல் மறு ஆய்வு மாநாட்டில் இந்த குற்றத்தின் வரையறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2018 ஆடி 17 ஆம் திகதியிலிருந்து இது ICC இன் சட்டவரம்புக்கு உட்பட்டது என்று ரோம் சாசன நாடுகள் எல்லாம் 2017 மார்கழி 15 இல் இணங்கி ஏற்றுக் கொண்டன.

1 ஜூலை 2002 அன்று அல்லது அதற்குப் பிறகு இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது போர்க் குற்றங்கள் நடந்தால் பின்வரும் சந்தர்ப்பங்களில் ICC தனது அதிகார வரம்பைப் பயன்படுத்தலாம்.

- இக்குற்றங்கள் ரோம் சாசன நாட்டின் நபர் ஒருவரால் நடத்தப்பட்டால், அல்லது ரோம் சாசன நாடு ஒன்றில் நடத்தப்பட்டால், அல்லது ரோம் சாசனத்தின் சட்டவரம்பை ஏற்றுக் கொண்ட நாடு ஒன்றில் நடத்தப்பட்டால் ICC அவற்றை விசாரிக்க முடியும்.

- அல்லது, இக்குற்றங்கள் தொடர்பான வழக்கு ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 7ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டதற்கு இணங்க ஐ.நா. பாதுகாப்புச் சபையால் ICC இற்கு பாரப்படுத்தப்பட முடியும்.

17 ஆடி 2018 இற்குப் பின்னர் மேலே கூறப்பட்ட ஆக்கிரமிப்புச் செயலை ஒரு ரோம்

சாசன அரசாங்கமோ அல்லது அதை ஏற்றுக் கொள்ளாத ஒரு அரசாங்கமோ நடத்தியிருந்தாலும், அது தொடர்பான வழக்கு ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 7ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டதற்கு இணங்க ஐநா. பாதுகாப்புச் சபையால் ICC இற்கு பாரப்படுத்தப்பட முடியும். இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில், ICC ஒரு நாட்டின் தேசிய குற்றவியல் அமைப்புக்களில் உள்ள குறைகளை நிரப்புவதற்கோ, அல்லது அதற்கு மாற்றாக செயற்படவோ உருவாக்கப்பட்ட ஒரு சட்ட அமைப்பு அல்ல. நாடுகள் வழக்குத் தொடர மறுக்கின்ற, அல்லது வழக்குத் தொடர விரும்பாத, அல்லது அந்நாடுகளால் உண்மையாக வழக்குத் தொடர முடியாத சூழலில் மட்டுமே அந்த வழக்குகளை ICC விசாரிக்கின்றது.

மேலும், ஒரு நீதித்துறை நிறுவனமாக, ICC க்கு சொந்தமான காவல் படையோ அல்லது அமலாக்க அமைப்போ இல்லை. எனவே, தனது செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உலகெங்கிலும் உள்ள நாடுகளின் ஒத்துழைப்பை அது நம்பியுள்ளது. குறிப்பாக சந்தேக நபர்களை தளை செய்தல், தளை செய்யப்பட்ட நபர்களை ஹேக்கில் (Hague) உள்ள ICC தடுப்பு மையத்திற்கு மாற்றுதல், சந்தேக நபர்களின் சொத்துக்களை முடக்குதல் மற்றும் தண்டனைகளை அமல்படுத்துதல் போன்றவற்றுக்கு உலகநாடுகளிலேயே ICC தங்கி இருக்கிறது. ICC ஒரு ஐக்கிய நாடுகளின் அமைப்பாக இல்லாவிட்டாலும், அதற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையே ஓர் ஒத்துழைப்பு ஒப்பந்தம் இருக்கிறது. ஒரு வழக்கு ICC இன் அதிகார வரம்பிற்குள் இல்லாத போது, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை அந்த வழக்கை ICC இற்கு வழங்கலாம். சூடான் மற்றும் லிபியா சம்பந்தமான வழக்குகளில் இது செய்யப்பட்டது.

அனைத்து பிராந்தியங்களிலும் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும் உருவாக்க ICC தீவிரமாக செயற்பட்டு வருகிறது. கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை உலகளாவிய ரீதியில் நடத்துவதன் மூலம் அதனை செய்கிறது. அது ரோம் சாசனத்தில் கையொப்பமிட்ட நாடுகளுடனும் கையொப்பமிடாத நாடுகளுடனும் ஒத்துழைத்து செயற்படுகிறது. நீதிமன்றத்தின் புதிய நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்தல், சந்தேகநபர்களை ICC தடுப்பு மையத்திற்கு மாற்றுதல், நீதிமன்றத்தில் அவர்கள் தோன்றுவதற்கு வசதி செய்தல் மற்றும் பல விடயங்களில் ICC அதன் புரவலர் நாடான நெதர்லாந்துடன் குறிப்பாக நெருக்கமான ஒத்துழைப்புடன் செயல்படுகிறது.

அதேபோன்று, பிற நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும், சிவில் சமூகக் குழுக்களும் ICC இற்கு தமது ஆதரவை பல வழிகளிலும் வழங்குகின்றன. ICC தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மற்றும் ICC இற்கும் அதன் சட்ட வரையறைகளுக்கும் மக்களிடையே ஆதரவை உருவாக்குதல் போன்ற பல வழிகளில் அவை ICC உடன் ஒத்துழைக்கின்றன. கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் போன்ற வழிகளில் இந்த தொடர்ச்சியான ஒத்துழைப்பை அதிகரிக்க ICC முயல்கிறது.

ICC இன் செயற்பாட்டு வழிமுறைகளைப் பார்க்கும் போது, ஈழத்தமிழர் பிரச்சனையை அங்கு கொண்டு செல்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, ஐ.நா. பாதுகாப்பு சபை ஒரு வழக்கை ICC இடம் பாரப்படுத்த வேண்டும். அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பிரச்சனையை பாதுகாப்பு சபையிடம் பாரப்படுத்த வேண்டும். ஆனால், அதற்கான சாத்தியங்கள் மந்தகதியிலேயே உருவாகி வருவதை நாம் மேலே பார்த்தோம். இரண்டாவது வழி

> **“ஈழத்தமிழர்கள், சிறிலங்கா அரசாங்கத்தால் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது”**

பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர் தமக்கு நடந்த பாதிப்புக்கும் ரோம் சாசனத்தில் கையொப்பமிட்ட ஒரு நாட்டுக்கும் தொடர்பிருப்பதாக கூறி ஒரு வழக்குத் தொடரப்பட வேண்டும் என்று ICC இற்கு ஒரு பிரேரணையை சமர்ப்பிக்கலாம்.

இந்த இரண்டாவது உத்தியைப் பயன்படுத்தி மியன்மாருக்கு எதிரான வழக்கு ஒன்று ICC இல் தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்களை மார்கழி இதழில் வெளியிட்டு இருந்தோம். மியன்மார் ரோம் சாசனத்தில் கையொப்பமிடாத ஒரு நாடாக இருந்தாலும் அங்கு நடந்த மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் ரோம் சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள பங்களாதேசுடன் சம்பந் தப்பட்டவை என்ற ரீதியில் அந்த வழக்கு முன்வைக்கப்பட்டது. ICC அந்த வாதத்தை ஏற்றுக் கொண்டு ஒரு வழக்கை நடத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கையான உண்மையை கண்டறிவதற்கும் அதற்கான ஆதாரங்களை சேகரித்து வழக்குகளை கட்டமைக்கவும் வேண்டிய பணிகளில் ஈடுபட்டுள்ளது.

‘உலகளாவிய உரிமைகளை பின்பற்றல் (Global Rights Compliance, LLP)’ என்ற அமைப்பு 2021 ஐப்பசி மாதம் ஈழத்தமிழர்கள் சார்பாக ஒரு வழக்கு நடத்தப்பட வேண்டும் என்று ICC இல் ஒரு பிரேரணை சமர்ப்பித்துள்ளது. 200 ஈழத்தமிழர்கள் சார்பாக, அவர்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் துன்புறுத்தல், மிரட்டல் காரணமாக அவர்கள் இங்கிலாந்தில் இருந்து தமது சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாமல் இருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்கள் மீது நடத்தப்படும் குற்றத்தில் இங்கிலாந்து சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த வழக்கை ICC விசாரிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இங்கிலாந்து ரோம் சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள ஒரு நாடு.

மியன்மார் தொடர்பான வழக்கில், குற்றம் தொடர்பான தனது வியாக்கியானத்தை ICC விரிவுபடுத்தி உள்ளது. அதாவது மனித குலத்திற்கு எதிரான குற்றத்தில் “குறைந்தபட்சம் ஒரு பகுதியாவது வங்காளதேசத்தின் பிர தேசத்தில் (அல்லது ரோம் சாசனத்தை ஏற்றுக் கொண்ட அங்கத்துவ நாடு ஒன்றின் பிரதேசத்தில்) நடந்திருக்கின்றமையால் அக் குற்றம் மீதான விசாரணையை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. பர்மிய ரோஹிங்கியா மக்கள் மீது நடத்தப்படும் குற்றங்கள் வங்காளதேசத்துடன் போதிய அளவுக்கு தொடர்புபட்டு இருப்பதால் அக்குற்றங்களை செய்தவர்கள் மீதான விசாரணை அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் மேற்கொள்ளப்பட முடியும்.” இவ்வாறாக ICC இன் குறைநிரப்பு மற்றும் ஒத்துழைப்பு பிரிவின் இயக்குனர் பாகிசோ மொசொசொகோ (Phakiso Mochochoko) கூறியுள்ளார். அதே வாதத்தைப் பின்பற்றியே ‘உலகளாவிய உரிமைகளை பின்பற்றல்’ அமைப்பும் ICC இல் ஈழத்தமிழர்கள் தொடர்பான வழக்கைத் தொடரும் பிரேரணையை முன்வைத்துள்ளது.

இந்தப் பிரேரணையில் முன்னாள் சனாதிபதி கோதாபய ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன, இராணுவ தளபதி ஜகத் ஜயசூரிய உட்பட பலர் மீது வழக்கு தொடரப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அவர்கள் நாடு கடத்தப்படாமல் இருப்பதற்கான மனித உரிமையை சம்பந்தப்பட்ட ஈழத்

(21 ஆம் பக்கம் பார்க்கவும்)

# தமிழ்த் தலைமைகள் கோரும் சமஸ்டி முறையும் அதற்கான போராட்ட வழிவகையும் (பகுதி – 4)



ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு.திருநாவுக்கரசு அவர்களால் 13.03.2022 அன்று நடாத்தப்பட்ட "தமிழ்த் தலைமைகள் கோரும் சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழிவகையும்" என்கிற உரையாடல் வகுப்பின் இறுதிப் பகுதி இங்கே பிரசுரமாகிறது.

■ மு.திருநாவுக்கரசு

தொகுப்பு - ரஜீந்தினி

ஈழத்தமிழர்களுடைய பிரச்சனை பூகோள அரசியல் பிரச்சனை அல்ல. புவிசார் அரசியல் பிரச்சனை தான் ஈழத் தமிழர்களுடைய முதலாவது பிரச்சனை. பூகோள அரசியல், புவிசார் அரசியல் என்று சொல்லப்படுகின்ற இந்த விடயங்களை புரிந்து கொள்ள நாங்கள் சற்றுப் பயணிக்க வேண்டும்.

உலகளாவிய பொதுவான அரசியலைப் பற்றி சொல்வதற்கு பின்வருமாறு ஓர் அட்டவணையை சொல்ல முடியும். முதலாவது பூகோள அரசியல் (Global Politics), இரண்டாவது சர்வதேச அரசியல் (International Politics), மூன்றாவது புவிசார் அரசியல் (Geo Politics), நான்காவது அரசியல் புவியியல் (Political Geography), ஐந்தாவது தேசிய அரசியல் (National Politics) இந்த ஐந்து விடயங்களோடும் இணைந்தது தான் எங்களுடைய போராட்டம்.

பூகோள அரசியல், சர்வதேச அரசியல் இரண்டும் அரசியல் ரீதியானவை. புவிசார் அரசியல், அரசியல் புவியியல், தேசிய அரசியல் இந்த மூன்றும் அடிப்படையில் புவியியல் ரீதியானவை. தேசம் என்பதன் முதலாவது கட்டமைப்பே அரசு. அதன் தொடக்கமே புவிசார் அரசியல் தான். புவியை சார்ந்து மனிதன் அரசு என்ற நிறுவனத்தை கட்டுவதனால் தான் அந்த அரசு என்கிற நிறுவனம் உருவாகிறது. எனவே அரசு என்கிற நிறுவனம் முதலாவது அர்த்தத்தில் புவியை சார்ந்திருக்கிறது.

இரண்டாவது, அந்த அரசினுடைய அமைவிடம், அதனை சூழ்ந்திருக்கக் கூடிய நாடுகள், ஆறுகள், கடல்கள், வளங்கள், மலைகள் என்கின்ற அந்த நாட்டினுடைய அமைவிடம் பிராந்தியம் தொடர்பான அதன் அரசியல்.

புவியினுடைய வளத்திற்கு ஏற்ப அரசினுடைய வளம் இருக்கும். புவியினுடைய வளத்தை கையாள்வதற்கு ஏற்ப அரசியல் வளம் இருக்கும். இன்று மத்திய கிழக்கு என்று சொல்லப்படுகின்ற மேற்காசியாவானது அதன் புவிசார் அரசியல் அமைவிடமாக இருக்கிறது. இரண்டாவது, அதன் புவியியல் வளம். அவர்களுக்கு அது பெற்றோலியத்தால் இருக்கும். ஆகக் கூடியது 75 வருடத்துக்கு பின்னர் அந்த வளம் இருக்காது. அது ஒரு முடிவடையப் போகும் பொருள். ஆனால் அந்த நாடுகளின் அமைவிடம் அப்படியே தான் இருக்கும்.

இப்போது புவிசார் அரசியலில் முதலாவதாக இருக்கக்கூடிய அரசு, தேசம் என்பவை புவியை அடிப்படையாக கொண்டு தான் இருக்கின்றன என்பதை கருத்தில் கொள்வீர்களாக இருந்தால், அதாவது நிலத்தை அடிப்படையாக கொண்டு அரசு, தேசம் என்கிற இரண்டும் இருக்கிறதாக இருந்தால், தமிழ் மக்கள் பிரித் தானிய இராச்சிய காலத்தில் வைத்த கோரிக் கையில் புவி சம்பந்தபட்டிருக்கவில்லை. இதனை அரசியல் விஞ்ஞானத்தோடு சம்பந்தப்பட்ட, அரசறிவியலோடு சம்பந்தப்பட்ட, அரசியல் தலைமைகளோடு சம்பந்தப்பட்ட, போராட்டத்தோடு சம்பந் தப்பட்ட யாவரும் தெளிவாக கருத்தில் கொள்ள வேண்டும்.

*சிங்கள பேரினவாதம் எது எல்லாம் தனக்கு வேண்டுமோ அதை எல்லாம் கட்டி எழுப்பியது.*

---

*சிங்கள குடியேற்றத்திற்கு தமிழ் தலைவர்கள் முழு ஆதரவாக இருந்தார்கள்.*

இலங்கை அரசியலில் “ஆக்க காலம்” என்ற ஒரு பகுதி இருந்தது. குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த காலத்திலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை சுமாராக பத்து, பன்னிரெண்டு வருடங்கள் உள்ள காலம் இலங்கை அரசியலில் சிங்கள பௌத்த அரசியலின் ஆக்க காலப்பகுதி. இந்த காலத்தில் தான் அவர்கள் ஒற்றை ஆட்சியை முன்வைக்கிறார்கள். இந்த காலத்தில் தான் அவர்கள் குடியேற்றத்தை முன்வைக்கிறார்கள். குடியேற்றம் தான் தமிழ் மக்களினுடைய தேசத்தை சல்லடையாக்கியது. எலும்புக்கூடாக்கியது. எனவே இந்த பத்து வருட காலமான ஆக்க காலத்தில் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டார்கள். இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்த பின்பு 1956 ஆம் ஆண்டு வரையான 10 வருடத்துக்குள் தமிழ் மக்கள் தங்களுடைய புவிசார் அரசியலுக்கு என்னவெல்லாம் அடிப்படையோ அவற்றை எல்லாம் இழந்தார்கள்.

சிங்கள பேரினவாதம் எது எல்லாம் தனக்கு வேண்டுமோ அதை எல்லாம் கட்டி எழுப்பியது. உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் அவர்கள் பிரித்தானியாவோடு படைத்தளத்தை அமைத்து கொடுத்து அவர்களின் உதவியை பெற்று மேலும் சர்வதேச உதவியையும் பெற்று எல்லாவற்றையும் கையாண்டார்கள். எனவே இங்கு தேசம் என்கின்ற ஒரு சிந்தனை நிலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் நிலையில் தமிழர்கள் தம்மை தேசமாக உணரும்படி நிலத்தோடு சம்பந்தப்பட்ட கோரிக்கையை அவர்கள் முன்வைக்கவில்லை. நிலத்தோடு சம்பந்தப்பட்ட அரசியல் வாழ்வு முறையை சிந்திக்கவில்லை. நிலத்தோடு சம்பந்தப்பட்ட எதிர்காலம் பற்றி சிந்திக்கவில்லை.

தந்தை செல்வநாயகம் 1949 ஆம் ஆண்டு கட்சி தொடங்கி சமஸ்டி கோரிக்கை முன்வைத்தாலும் 1952 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வி அடைந்தார். இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தான் அவர் கட்சியிலிருந்து வெற்றி பெற்றார்கள். ஜி.ஜி.பொன்னம்பலம் தான் தலைவராக வெற்றி பெற்றார். பின்னர் 1956ஆம் ஆண்டு தேர்தலில் செல்வநாயகம் வெற்றி பெற்ற போது தான் தமிழ் மக்கள் சமஸ்டி கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள் என்ற முடிவுக்கு நாங்கள் வர வேண்டும். 1949 ஆம் ஆண்டு கோரிக்கையாக முன்வைத்தாலும் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டது 1956 ஆம் ஆண்டு தான்.

இங்கு ஒரு தேசிய இனம் புவி சார்ந்து இருக்கின்றது என்பதை கருத்தில் கொள்ளாமல், அதனுடைய வாழ்வு தேசிய கட்டமைப்போடு புவியோடு சம்பந்தப்பட்டிருப்பதை கருத்தில் கொள்ளாமல் புவிசார் சிந்தனை அற்று நாங்கள் இருந்தோம். சிங்கள குடியேற்றத்தை பற்றிய சிந்தனை இல்லாமல் சிங்கள குடியேற்றம் நிகழ அனுமதித்தோம், உதவி செய்தோம், ஒத்துழைத்தோம். தமிழ் தலைமைகளும் தமிழ் அதிகாரிகளும் சிங்கள ஆட்சியாளர்களோடு நூறு வீதம் ஒத்துழைத்தார்கள். டி.எஸ் சேன நாயக்க காலத்திலும் 1956 ஆம் ஆண்டு காலம் வரையிலும் சிங்கள குடியேற்றத்திற்கு தமிழ் தலைவர்கள் முழு ஆதரவாக இருந்தார்கள். தமிழ் அதிகாரிகள் அதை நடைமுறைப்படுத்தினார்கள்.

1956 ஆம் ஆண்டு வரைக்குமான இந்த காலக்கட்டத்தில், இந்த பத்து ஆண்டு ஆக்க காலப்பகுதியில் சிங்களம் தன்னை முழு அளவில் ஸ்தாபிதம் செய்து கொண்டது. இந்த சிங்கள பௌத்தத்தின் எழுச்சி 1950களின் மத்தியில் தெளிவாக வெளிப்பட்டது. இதனை எங்களுடைய தேசம் பற்றிய அடிப்படை சிந்தனையோடு அனைவரும் பின்னிப்பிணைத்து பார்க்க வேண்டும். நிலம் பற்றிய சிந்தனையோடு பின்னிப்பிணைத்து பார்க்க வேண்டும். எனவே தேசம் என்றால் அது நிலத்தைச் சார்ந்து இருக்கிறது. அரசு, நாடு, தேசம், தேசிய இனம் யாவும் நிலத்தைச் சார்ந்து இருக்கின்றன. நிலம்

சார்ந்த கொள்கையற்ற மக்களாக நாங்கள் ஆக்க காலத்தில் இருந்தோம்.

குடியேற்றத்தை அரசியல் புவியியல் என்று சொல்வார்கள். புவிசார் அரசியலின் இரண்டாவது அம்சம் இடம் (Location). இந்த இடம் தான் இன்று ரஷ்யாவினுடைய பிரச்சனை. அதாவது அது அமைந்திருக்கின்ற இடம். ரஷ்யா - உக்ரைன் பிரச்சனையை புவிசார் அரசியலாகத் (Geo politics) தான் முதலாவது கட்டத்தில் பார்க்க வேண்டும். பூகோள அரசியலாக (Global politics) அல்லவே அல்ல.

ரஷ்யாவை பொறுத்தவரையில் அதனுடைய புவிசார் பகுதிகள் நேட்டோ உடன் இணைக்கப்பட்டால் ரஷ்யா என்கிற தேசம் அழிந்து விடும் என்பது தான் அதன் பிரச்சினை. தனது புவிசார் அரசியல் நலன்களை பாது காப்பதற்கு தான் ரஷ்யா போராடுகிறது. மத்தியதரைக்கடல், கருங்கடல், கிழக்கு ஐரோப்பியாவில் ரஷ்யா சார்ந்த பகுதி இந்த மூன்றும் தான் ரஷ்யாவினுடைய பகுதிகள். இந்த மூன்றும் புவிசார் அரசியல் பகுதிகள். இந்த மூன்றுக்கும் வெளியில் ரஷ்யா வரவில்லை.

மறுபுறமாகப் பார்த்தால், அமெரிக்காவோடு இந்தியா கூட்டு சேர்ந்து இருக்கிறது. அமெரிக்காவின் அரசியல் உலகளாவிய அரசியல். அது பூகோள அரசியல். அமெரிக்கா உலகளாவிய நலனில் இந்துமா கடலில் அரசியல் நலனை பங்கு போடுவதற்கு அது இந்தியாவுடன் கூட்டு சேர்ந்து இருக்கிறது. அமெரிக்காவுடன் கூட்டு சேருவதற்கு இந்தியாவுக்கு ஒரு காரணம் இருக்கிறது. அதே போன்று ரஷ்யாவுடன் கூட்டு சேருவதற்கும் இந்தியாவுக்கு ஒரு காரணம் இருக்கிறது.

முதலாவது அர்த்தத்தில் தன்னுடைய தேசத்தின் எல்லையை பாதுகாப்பதற்கான ஆயுதம், தளபாடம், விஞ்ஞானம், தொழிநுட்பம் என்பவற்றுக்கு இந்தியாவிற்கு அமெரிக்கா வேண்டும். இதை இந்தியாவால் தனித்து செய்ய முடியாது. எனவே அது அமெரிக்காவுடன் கூட்டுக்கு போகிறது. அது சீனாவை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. அமெரிக்காவோடு இந்தியா செய்து இருக்கிற இந்தோ பசுபிக் கூட்டு என்பது இந்தியாவின் பிராந்திய நலனை நிலை நாட்டுவதற்கு அது செய்துள்ள புவிசார் அரசியல் (Geo politics). இங்கு அமெரிக்காவின் நலன் உலகளாவிய நலன் (Global Interest). இந்தியாவின் நலன் புவிசார் அரசியல் (Geo politics) நலன். இந்துமா கடல் பகுதியில் சீனாவை புறம் தள்ளவும், தன்னை நிலை நிறுத்தவும், இலங்கைக்குள் வெளி அரசுகள் வராமல் பாதுகாத்துக் கொள்ளவும் அமெரிக்காவின் கூட்டு இந்தியாவுக்கு தேவை.

இந்தியா 140 கோடி மக்களை கொண்ட பெரிய நாடு. தன் ஐம்பது வீதத்திற்கும் குறையாத ஆயுதங்களுக்கு ரஷ்யாவை சார்ந்திருக்கிறது. ஆயுதங்களுக்கு ரஷ்யாவை சார்ந்து இருக்கும் அதேவேளை, புவிசார் அரசியலுக்காக அது அமெரிக்காவை சார்ந்து இருக்கிறது. இந்த இரண்டுக்கும் நடுவில் அமெரிக்க ரஷ்ய பிரச்சனையில் அது தன்னை தற்காக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டி இருக்கிறது. எனவே இந்தியா ஐ.நா.வில் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களிக்காமல் இருந்தது. ரஷ்யா தொடர்பான அமெரிக்காவின் பூகோள அரசியலில் கூட்டுச் சேராமல் இருப்பது எல்லாம் இதன் விளைவு தான். இங்கு இந்தியாவினுடைய புவிசார் அரசியல் நலனுக்காக ரஷ்யாவினுடைய புவிசார் அரசியல் நலனை அது அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இப்படி பார்த்தால் ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நான்கு நாடுகளின் பூகோள அரசியலையும் புவிசார் அரசியலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். தெளிவான படம் ஒன்று கிடைக்கும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அது எதிர்கொள்ளும் யுத்தங்கள் திட்டவட்டமான நிகழ்ச்சி நிரலோடு நீண்டகால திட்டங்களோடு உள்ளன. அது கணக்கு தீர்க்க வேண்டிய எதிரிகள் 'சிவப்பு', 'பச்சை', 'மஞ்சள்' குழுக்களை சார்ந்தவர்கள். இதில் சிவப்புடனான பிரச்சனையை 1990 ஆம் ஆண்டு தீர்த்து விட்டது. அது ஒரு கோட்பாட்டு யுத்தம். மார்க்சியம் - கொம்யூனிசத்தை உடைத்து உலகம் முழுவதற்குமான வர்த்தக சந்தை பொது சந்தை என்கிற முறையை நிலைநாட்டுவதில் அமெரிக்கா வெற்றி பெற்றிருக்கிறது.

இவ்வாறு வடிவம் பெற்று இருக்க கூடிய அமெரிக்கா சிவப்பிற்கு முடிவு கட்டிய பின்பு

சிவப்புடன் ஏற்படக் கூடிய ஒரு யுத்தம் உலகப் போராகவே இருக்கும். அதை பனிப்போராக சுருக்கி உலகப்போர் வர விடாமல் தடுத்து அது பனிப்போரில் வெற்றிக் கொண்டு விட்டது.

சீனாவின் உதவி தான் அமெரிக்கா வெற்றிக் கொள்ள மூலகாரணம். இவ்வாறு வெற்றிக் கொண்ட அமெரிக்காவிற்கு, அடுத்த பிரச்சனை பச்சை. அணு ஆயுத பலத்தை கொண்டு இருந்த ரஷ்யாவோடு யுத்தம் இன்றி ஒரு உலகப்போருக்கு போகாமல் தீர்த்து கொண்ட பின்பும், அது பெரிய சண்டைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. சதாம் உசைன், பின்லேடன், கடாபி இவர்கள் எல்லோரையும் அவர்கள் திட்டவட்டமாக வெற்றி பெற்று விட்டார்கள். பனிப்போர் முடிந்த பின்பு அமெரிக்காவின் கவனம் பச்சை எதிர்ப்பு (anti green), முஸ்லிம் எதிர்ப்பு (anti muslim), இஸ்லாம் எதிர்ப்பு (anti islam). இதிலும் அவர்கள் திட்டவட்டமாக வெற்றி பெற்று விட்டார்கள்.

இந்த உலகப்போரை பனிப்போராக மாற்றியதில் அணுகுண்டுகளுக்கு பெரிய பங்கு இருக்கிறது. அணுகுண்டுக்கு பயந்து தான் உலகப்போருக்கு போகவில்லை. 1990 ஆம் ஆண்டுக்கு பின்பு, அமெரிக்கா பெரிய போரில் வெற்றி பெற்று விட்டது. பின்லேடன் இல்லை, சதாம் உசைன் இல்லை, கடாபி இல்லை, இஸ்லாமிய உலகமே இல்லை. இஸ்லாமிய உலகில் அரசியல் தலைமைத்துவம் இல்லை. இதன் பின்பு அமெரிக்காவினுடைய பெரிய போர் ரஷ்யா.

ரஷ்யாவை நேரடியான ஒரு உலகப் போருக்கு போக விடக்கூடாது என்ற வகையில் தான் அமெரிக்கா அந்த போரை ஒரு பிரதிநிதித்துவப் போர் (proxy war) ஆக்கியது. அதற்காக அது தேர்ந்தெடுத்த கருவி தான் நேட்டோ (NATO). அமெரிக்காவின் இரண்டு கண்டங்களும் அமைதியாக உள்ளன. அமெரிக்காவை சார்ந்த இரண்டு சமுத்திரங்களும் அமைதியாக உள்ளன. அங்கே எந்தவிதமான குண்டுசி விழுந்த சத்தங்களும் கேட்கவில்லை.

***வருங்காலத்தில் ஈழத்தமிழர்களது அரசியலை நிர்ணயிப்பதில் ரஷ்ய அமெரிக்க பிரச்சனை ஒரு பெரிய முன்மாதிரியாக இருக்கிறது. இதனை தமிழர்கள் யோசிக்க வேண்டும்.***

நேட்டோ நாடுகள் முழுவதும் ரஷ்யாவிற்கு பக்கத்தில் இருக்கின்ற புவிசார் நாடுகள். ரஷ்யா தன்னுடைய புவிசார் பகுதியை தீண்ட விடாது. அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு அமெரிக்க நிபுணர்கள், அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள், அமெரிக்க இராணுவ நிபுணர்கள் தொடர்ச்சியாக சொல்லி இருக்கிறார்கள். 'நீ இந்த நேட்டோவிற்குள் உக்ரைனை கொண்டு வர முற்பட்டால் அந்த பிராந்தியத்தை குழப்புகின்ற பழிக்கு உள்ளாவாய். அல்லது அந்தப் பிராந்தியத்தை குழப்புகின்ற நிகழ்ச்சி நிரலை நீ தான் கொண்டு இருக்கிறாய் என்று எதிர்காலம் அமெரிக்காவை குறை சொல்லும்.' என்று அறிஞர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஏனென்றால், உக்ரைனை எடுத்தால் அது ரஷ்யாவின் இருதயப்பகுதி. ரஷ்யாவின் அழிவுக்கு வழி வகுக்கக் கூடிய பகுதி. எனவே ரஷ்யா ஒரு போதும் உக்ரைனை நேட்டோவிற்கு விட்டுக்கொடுக்காது. இந்த உக்ரைன் பிரச்சனை ஈழப்பிரச்சனையில், இந்தியப்பிரச்சனையில், இலங்கைப்பிரச்சனையில் பாரிய தாக்கத்தை விளைவிக்கும். இதனை தமிழர்கள் யோசிக்க வேண்டும். இது உடனடிக் காலத்தில் இல்லை, வருங்காலத்தில், ஈழத்தமிழர்களது அரசியலை நிர்ணயிப்பதில் ரஷ்ய அமெரிக்க பிரச்சனை ஒரு பெரிய முன்மாதிரியாக இருக்கிறது. அமெரிக்காவின் கண்ணில் ரஷ்ய பிரச்சனை ஒரு பூகோள பிரச்சனை. ரஷ்யாவின் கண்ணிலும் நேட்டோ நாடுகளின் கண்களிலும் இந்தியாவின் கண்ணிலும் சீனாவின் கண்ணிலும் அது ஒரு புவிசார் பிரச்சனை. ஒரு வகையில் சீனாவிற்கும் அது ஒரு பூகோள அரசியல் பிரச்சினையின் ஒரு பகுதி தான். அமெரிக்காவின் வெற்றியும் வீழ்ச்சியும் சீனாவின் பொருளாதாரத்தை பாதிக்கும்.

இத்தகையப் பின்னணியில் ரஷ்ய பிரச்சனையை முழு அளவில் முதலாவது அர்த்தத்தில் புவிசார் அரசியல் பிரச்சனையாக பார்க்க வேண்டும். உலகளாவிய பிரச்சனையாக பார்க்கவே கூடாது.

அமெரிக்க சனாதிபதி பைடன் மிகவும் தெளிவாக சொல்லி இருக்கிறார், 'இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவீர்களேயானால் அது உலகப்போருக்கு போகும், அல்லது நேட்டோவை போரில் ஈடுபடுத்தினால் அது உலகப்போருக்கு போய்விடும்.' என்று சொல்லி யிருக்கிறார். இதன் மூலம் உலகப்போருக்கு கொண்டு போக விரும்பவில்லை என்று தெளி வாக சொல்லி இருக்கிறார். ஆனால் இதன் விளைவுகள் உலகத்துக்கு போகும்.

இப்போது புவிசார் அரசியல் பிரச்சினை யாக இருக்கும் இந்த யுத்தம் பின் உலகப் பிரச்சினையோடு கலக்கும். முழங்காலில் புண், இருந்தால் மேற்காலில் நெறி கட்டும். எனவே நெறிக்கு வைத்தியம் செய்வதில்லை இங்கே முக்கியம், முழங்காலில் உள்ள புண்ணுக்கு வைத்தியம் செய்துவிட்டால் நெறி மாறும். நெறிக்கு வைத்தியம் செய்து முழங்காலுக்கு வைத்தியம் செய்யாவிட்டால் முழங்காலில் புண் இருக்கும் வரையில் நெறி கட்டித்தான் ஆகும். இந்த மூன்று விடயங்களும் முக்கியம். அதில் முதலாவது ஒரு நோய் வந்து அதன் விளைவாக இன்னுமொரு நோய் வருவது. பூகோள அரசியல் (global politics), புவிசார் அரசியல் (geo politics) என்ற இரண்டையும் பொதுவாக சொல்ல கூடாது. அது பிழையான வழிக்கு கொண்டு போகும். அரசியல்வாதிகளும் சரி, அரசியல் மாணவர்களும் சரி இந்த வேறுபாட்டைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஈழத்தமிழரின் பிரச்சனை புவிசார் அரசியல் அதனுடைய நீட்சியாக பூகோள அரசியல். புவிசார் அரசியலில் இருந்து பூகோள அரசிய லுக்கு போகும். புண்ணுக்கு மருந்து கட்டித் தான் நெறியை மாற்ற வேண்டும். நீங்கள் நெறிக்குப் போய் மருந்து கட்டிக் கொண்டிருக்க முடியாது. எங்களுடையப் பிரச்சனை பூகோள அரசியல் பிரச்சினை அல்ல புவிசார் அரசியல் பிரச்சனை.

அறிவியல் சார்ந்து ஒழுங்காக சரியாக எழுத தவறினால் பிழையான முன்னெடுப்புக ளோடு மக்கள் சீரழிய நேரிடும். இத்தகைய ஒரு பின்னணியில் ஈழத்தமிழர்களுடைய பிரச்சனை எத்தகையது? உலகளாவிய பிரச்சனையா? புவிசார் பிரச்சனையா? இரண்டும் எப்படி கலக்கி றது? இரண்டினது கலப்பும் இருக்க முடியும். ஆனால் அடிப்படையானது ஒன்று இருக்கிறது. அதை நோக்கி தான் நீங்கள் கொள்கை வகுக்க வேண்டும். நாங்கள் முதலில் கதைத்த மூன்று (தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி) பகுதியினரும் வெளிநாடுகளோடு நல்ல உறவை வைத்திருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். நாங்கள் ஒருவருக்கும் எதிரி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை அப்படி இல்லை.

இந்த இடத்தில் ஈழத்தமிழர்களுடைய பிரச்சனையை பேர்முடா போல அடையாளம் காண வேண்டும். நூறு ஆண்டுகளுக்கும் மேற் பட்ட தோல்வி. மக்கள் போராட்டத்தின் பக்கம் நின்றார்கள், எல்லாவற்றையும் கொடுத்தார்கள், எல்லா வழியிலும் பின்னால் போனார்கள், மான சீகமாக ஆதரித்தார்கள். ஆனால் முழு தோல்வி. மக்களை அணி திரட்டி மட்டும் வெல்லலாம் என்கிற கற்பனை இருக்கக் கூடாது. சரியான கொள்கை இருக்க வேண்டும், சரியான திட்டம் இருக்க வேண்டும், சரியான அணுகுமுறை இருக்க வேண்டும், அதற்கு சரியான அறிவு இருக்க வேண்டும், அறிவியல் பார்வை இருக்க வேண்டும், எங்களுக்கு அடிப்படை வல்லமை இருக்க வேண்டும். வல்லமை இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது.

எல்லா கட்சிக்காரர்களையும் நோக்கி நான் ஒன்றை சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் பேசுகின்ற பிரதானமான விடயங்கள் உங்கள் கட்சியின் செயற்குழுவில் தீர்மானமாக எடுத்த பின்பு தான் பேசுங்கள். இது மக்களுடையது. உங்களுடைய சொத்து அல்ல. கட்சிக்குள் தீர்மானித்த பின்பு பேசுங்கள். நீங்கள் நீங்களாக நினைத்தபடி எதையும் சொல்கின்ற எழுமாற்று அரசியலுக்கு ஒரு நாளும் போகாதீர்கள். அது ஜனநாயகமும் ஆகாது. முறைசார் அரசியலும்

> **ஏன் உங்களுக்குள் குழம்புகிறீர்கள்?**
> **ஏன் மக்களை திசை திருப்புகிறீர்கள்?**
>
> **நீங்கள் போராடுங்கள், மக்கள் திரள்வார்கள்.**
> **சமஸ்டி எனும் கோரிக்கையை முன்வைத்து சேர்ந்து போராடுங்கள்!**

ஆகாது. நான் இவ்வாறு சொல்வது அரசியலை சீர்திருத்தவே தவிர, செம்மைப்படுத்தவே தவிர நிச்சயமாக யாரையும் குறை சொல்ல அல்ல. தோல்விக்கு பொறுப்பு ஏற்கும் கலாச்சாரத்தை முதலில் கொண்டிருங்கள். கடந்த பன்னிரெண்டு வருடமும் நீங்கள் ஒருவரும் வெற்றி பெறவில்லை என்கிற பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும். என்ன செய்யப் போகிறீர்கள்? முன்னோடியாக தொடர்ந்து தோல்வி இருக்கிறதே.

பூகோள அரசியலுக்கு அடுத்ததாக சர்வதேச அரசியல். International politics ஐ தமிழில் தவறாக சர்வதேச அரசியல் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொழி தெரிந்தவர் அரசியல் தெரியாமல் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பாகவே இது உள்ளது. International என்பது முழு உலகமும் என்பது அல்ல. International என்றால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையிலான உறவு. இந்த வகையில் சர்வதேசம் என்பது அரசியல் பதமாக இருக்காது. தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோரும் பூகோள அரசியல் என்பதை புவியியல் பதமாக பிரயோகிப்பதாக தான் எனக்கு தோன்றுகிறது. பூகோள அரசியல் என்பது நூறு வீதம் புவியியல் பதமே இல்லை. அது அரசியல் பதம். அதன் அடிப்படையில் புவிசார் அரசியல் தான் புவியியல் பதம்.

இப்போது மூன்றாவது கட்டத்துக்கு வருவோம். இப்போது எல்லோரும் சமஸ்டி தான் தீர்வு என்ற அடிப்படை முடிவுக்கு வந்திருக்கிறீர்கள் தானே. இந்த மூன்று பகுதியினரும் சேர்ந்து மக்களையும் இணைத்து ஒரு பொது சபையை உருவாக்குங்கள். ஒரு பொது போராட்டத்தை முன்வையுங்கள். சமஸ்டி என்ற கோரிக்கையை முன்வைத்தால் ஏனைய விடயங்கள் பற்றி பேசத் தேவையில்லை. புலம்பத் தேவையில்லை. பெரிய விடயம் பற்றி பேசினால் சின்ன விடயமும் அதனுள் அடங்கும்.

ஏன் மக்களை திசை திருப்புகிறீர்கள்? ஏன் உங்களுக்குள் குழம்புகிறீர்கள்? சமஸ்டி எனும் கோரிக்கையை முன் வைத்து மூன்று பேரும் மூன்று அணியும் சேர்ந்து போராடுங்கள். இது தான் அடிப்படையான பிரச்சனை. உங்கள் சக்திகளை ஒன்று திரட்டுங்கள். வீணாக சிதறடிக்காதீர்கள். மக்களை ஏமாற்றாதீர்கள். மக்களை திசை திருப்பாதீர்கள். மூன்று துண்டுகளாக இருக்கும் வரை மூன்று தலைகளாக இருந்து நாகம் அழிந்தது போலவே நாங்களும் அழிய நேரும். ஆகையினால் அதற்கு முடிவு கட்ட வேண்டி இருக்கிறது. இது முதலாவது விடயம்.

மூன்று பேரும் சேர்ந்து பொது முடிவை எடுத்து அதை முன்வையுங்கள் போராடுவோம். போராடி காட்டுங்கள். போராட்டம் வளரும். மக்களைத் திரட்டி தான் போராட போகிறோம் என்று சொல்கிறீர்கள் அல்லவா, அதற்கு இலேசான வழி நீங்கள் போராடுவது. நீங்கள் போராடுங்கள், மக்கள் திரள்வார்கள். யாராவது உண்ணாவிரதம் இருங்கள் பார்ப்போம். ஆயுதப் போராட்டமோ அகிம்சைப் போராட்டமோ நீங்கள் செய்கின்ற போராட்டம் ஒரு காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய போராட்டமாக இருக்க வேண்டும். நீங்கள் கொழும்பில் போராட வேண்டும். தலைநகரத்தில் போராட வேண்டும். அந்த போராட்டம் அனைவரையம் கவரக்கூடிய வகையில் காத்திரமாக இருக்க வேண்டும்.

மக்களை ஏமாற்றும் வழியாக நான்கு பேர், ஐந்து பேர் ஊர்வலம் போவது போராட்டம் அல்ல. 1970 ஆம் ஆண்டு தேர்தலில் அமிர்தலிங்கம் தோல்வியடைந்த பின், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சின்ன சின்ன கோயில்களில் போய் காலையில் எட்டு மணியிலிருந்து பின்னேரம் ஐந்து மணி வரை உண்ணாவிரதம் இருப்பார். அந்த உண்ணாவிரதம் பழரசம் அருந்துவதோடு முடியும். இவை அல்ல போராட்டம். நீங்கள் எதிரிக்கு தாக்கம் ஏற்படக் கூடிய வகையில் போராடினால் தான் அதற்கு பெயர் போராட்டம். எதிரிக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் போராட வேண்டும். எதிரிக்கு நெருக்கடியான

> **எதிரிக்கு தாக்கம் ஏற்படக் கூடிய வகையில் போராட வேண்டும். அதற்கு பெயர் தான் போராட்டம்.**
>
> **சமஸ்டி அடிப்படையில் போராட முற்பட்டால் இலங்கை அரசியல் கொதிநிலை அடையத் தொடங்கும்.**

வகையில் போராடாவிட்டால் போராட்டமே கிடையாது.

1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் எதிரிக்கு நெருக்கடியை ஏற்படுத்த முடியாமல் இருந்தது. போராடுவதற்கு தலைவர்கள் தான் முன்னுக்கு சென்று போராட வேண்டும். மக்கள் பின்னுக்கு வருவார்கள். தலைவர்கள் தியாகம் செய்து காட்ட வேண்டும். எல்லோருக்கும் துரோகிகள் என்று நீங்கள் இலேசாக பட்டம் சூட்டுகிறீர்கள். அதை நிறுத்துங்கள். நீங்கள் தியாகிகள் என்று காட்டுங்கள். துரோகிகள் தாங்களாகவே இல்லாது போவார்கள். ஒருவனை துரோகி என்று பட்டம் சூட்டுவதனை விட நடைமுறையில் உங்களை தியாகி என நிருபியுங்கள். அப்படி போராடிக் காட்டுவதனூடாக உன்னை தியாகியாக மேலே கொண்டு வா. வாழ்ந்தால் என்ன செத்தால் என்ன அந்த தியாகத்திற்கு பின்னால் மக்கள் எப்பொழுதும் திரளுவார்கள்.

எதிரி என்ன தருகிறான் என்பதல்ல பிரச்சினை. உனது தியாகத்தை மக்கள் மதித்து மேலும் முன்னெடுப்பார்கள். ஆகையினால் போராடப் போகிறீர்களா? போராடும் போது எதிரிக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் தியாகி என காட்டும் வகையில் உங்களுடைய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இது முதலாவது. இரண்டாவது, நீங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு போராடத் தயார் இல்லை என்றால் இன்னொரு வழி இருக்கிறது.

எல்லோரும் சமஸ்டி தானே கோருகிறீர்கள். எல்லோரும் தனித்தனியே உங்களுக்கு தெரிந்த வழியில் ஒரே நாளில் போராடுங்கள். உதாரணமாக, செல்வநாயகத்தின் வழியில் தமிழரசுக் கட்சிக்காரர்கள் சத்தியக்கிரகமாக போராடப் போவதென்றால் போராடுங்கள். ஆனால் ஒரு நாளை குறியுங்கள். ஒரு நாளில் போராடி விட்டு போவதில்லை. அது தொடர் போராட்டமாக இருக்க வேண்டும். அதே நாளில் அதே காலத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் உங்களுடைய போராட்டத்தை போராடுங்கள். உங்களுடைய போராட்டத்தை நீங்கள் தீர்மானியுங்கள். தமிழரசுக் கட்சி ஒரு நாளை நிர்ணயிக்கட்டும். அதே நாளையே உங்கள் போராட்டத்திற்கு நிர்ணயம் செய்யுங்கள். விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியினர் அதையே செய்ய வேண்டும். மூன்று பேரும் ஏக காலத்தில் மூன்று துண்டாக நின்று போராடினாலும் பிரச்சனை இல்லை. பலம் குறைவு தான். ஆனால் போராடாமல் விடுவதை விட பரவாயில்லை.

சமஸ்டி அடிப்படையில் நீங்கள் போராட முற்பட்டால் இலங்கை அரசியல் கொதி நிலை அடையத் தொடங்கும். அப்போது மக்கள் உங்களுக்கு பின்னால் வருவார்கள். சர்வதேசத்தில் முக்கியத்துவம் பெறும். அயல் நாட்டில், வெளிநாடுகளில் முக்கியத்துவம் வளரும். அந்த நேரத்தில் போராட்டத்தின் பலத்திற்கு ஏற்ப நீங்கள் சொல்கின்ற வெளிநாடுகளை கையாளலாம். ஆகையினால் இரண்டு வழிகள் இருக்கின்றன. எல்லோரும் சேர்ந்து ஒரு செயற்குழுவை அமைத்து அந்தக் குழு ஊடாக போராட்டத்தை முன்னெடுங்கள். திட்டமிட்டு அதை செய்யலாம். சாத்வீகவழி போராட்டங்களையே நான் குறிப்பிடுகிறேன். உங்கள் யாரையுமே மரணத்தை நோக்கி போராடுங்கள் என சொல்லவில்லை. உச்சகட்டமாக எதிரிக்கு நிர்க்கதி கொடுக்க கூடியவாறு போராடுங்கள். இது முதலாவது வழி. அல்லது இரண்டாவது வழியாக எல்லோரும் சேர்ந்து ஒரே கோரிக்கையை முன்வைத்து போராடுங்கள். தனித்தனியாகவேனும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் போராடுங்கள்.

இந்த இரண்டையும் செய்ய தயார் இல்லை என்றால் தயவு செய்து ஒதுங்கி விடுங்கள். மக்களை பன்னிரெண்டு வருடங்களாக ஏமாற்றியது போதும். இன்னும் தொடர்ந்து ஏமாற்ற போகிறோம் என பந்தயம் பிடித்தீர்களேயானால் ஹெமிங்வேயின் நாவல் போலவே கடைசியில் எலும்புக்கூடு தான் மிஞ்சும்.



# தாயக ஒருமைப்பாட்டை உணர்த்திய வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி




சி.அ யோதிலிங்கம்

சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியில் சிவில் சமூக அமைப்புகளையும் இணைத்து வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய போராட்டமும் பேரணியும் இடம்பெற்றது. சிறீ லங்காவின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் மரபு ரீதியாகவே புறக்கணித்து வந்துள்ளனர். ஆனால், 2009 க்குப் பிறகு குறிப்பிட்ட காலம் பிரதான தமிழ்த் தேசியக் கட்சியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பை அனு சரித்துப் போகின்ற ஒரு அரசியலை செய்தது. தென்னிலங்கையில் நடந்த சுதந்திர தின எழுச் சிக் கொண்டாட்டங்களில் சம்பந்தனும், சுமந்தி ரனும் பங்கேற்று சிறப்பித்தமை தான் நடந்தது. சிங்க கொடியை சம்பந்தன் அசைத்ததையும் நல்லாட்சிக் காலத்தில் பார்க்கக் கூடியதாக இருந்தது.

தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக சிங்கள ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட சட்டபூர்வ அனுமதிப்பத்திரம் தான் சிறிலங்காவுக்கு வழங் கப்பட்ட சுதந்திரம். அந்த அனுமதிப்பத்திர த்தை வைத்துக் கொண்டு தான் தமிழ் மக்களை கடுமையாக ஒடுக்கும் வேலைத்திட்டத்தை சிங் கள ஆட்சியாளர்கள் தொடங்கினர். ஒடுக்கு முறைகள் இரு வழிகளில் இருந்தன. ஒன்று ஆட்சி அதிகார கட்டமைப்பை சிங்களமயமாக்கும் செயற்பாடு. அது தேசியக் கொடியில் இருந்து தொடங்கி தனிச் சிங்கள சட்டமூடாக கடைசி யாக 1972 ஆம் ஆண்டு யாப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பது வரை, சிங்கள மயமாக்கல் தொடர்ந்து வருகிறது. இரண்டாவது தமிழ் மக்கள் தேசமாக இருப்பதை அழிப்பது.

இந்த இரண்டு அக்கிரமங்களையும் சுதந்திர தின அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தினர். தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதை அழிப்பதற்கு தான் சிங்கள குடியேற்றங்கள் உருவாகின. சிங்கள குடியேற்றத் திட்டங்களை தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களை இணைக்கும் மையமான திருகோணமலையில் தான் தொடங்கினார்கள். மையமாக இருக்கிற மாவட்டத்தை சிதைப்பத னூடாக தமிழர்களின் தாயக கோட்பாட்டை சிதைக்கலாம் என்கிற இலக்கு தான் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இருந்தது. இந்த அழிப்பு வரலாற்றையும், சிங்கள மயமாக்கல் வரலாற்றை யும் புதிய தலைமுறைக்கு ஓரளவுக்காவது இப் பேரணி மூலம் கடத்தியிருக்கிறது.




2009 இறுதிப்போருக்கு பிறகு நீண்ட காலமாக இந்த சுதந்திரதின எதிர்ப்பு நடக்க வில்லை. இப்போது மாணவர்கள் அந்தப் போராட்டத்தை கையில் எடுத்துள்ளார்கள். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிப் போரா ட்டம் கிழக்கிலிருந்து வடக்குக்கு வந்தது. இந்தப் போராட்டம் வடக்கில் இருந்து கிழக் குக்கு போகிறது. தேசிய இன ஒடுக்குமுறை வலுவாக இருக்கிற மாகாணம். எல்லா பக்கங்களாலும் கிழக்கு தமிழ் மக்களை சிதைக்கின்ற வேலைத்திட்டம் நடக்கிற மாகா ணம். மாணவர்களின் போராட்டம் கிழக்கில் முடித்து வைக்கப்பட்டது முக்கியத்துவமானது.

வடக்கு கிழக்காக ஒரு தேசமாக நாங் கள் நிற்கிறோம் என்கிற செய்தியை அழுத்தி சொல்கிறது. புதிய தலைமுறைக்கு நாங்கள் வரலாற்றை தொடர்ச்சியாக கடத்தி வருகிறோம் என்பது முக்கியமானது. தமிழ் மக்கள் ஒரு அரசற்ற சமூகமாக இருப்பதால் வரலாற்றைக் கடத்தும் முயற்சிகளை தமிழ் மக்களே முன் னெடுக்க வேண்டும். அந்த வகையில் வலுவான முக்கியத்துவம் இதற்கு இருக்கிறது. பெரும் தேசியவாதிகளும் புவிசார் அரசியல்காரரும், பூகோள அரசியல்காரர்களும் இனப்பிரச்சி னையை வடக்குடன் மட்டும் முடக்கவே விரும்பு கின்றனர். அரசியல் தீர்வையும் அதற்கேற்பவே சிபார்சு செய்ய முனைகின்றனர். மறுபக்கத்தில் கிழக்கில் தமிழ்த்தேசிய எதிர்ப்பு அரசியல் ஒன்று முன்னாள் போராளிகளைக் கொண்டே கட்டியெழுப்பப்படுகின்றது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால் வடக்கும் கிழக்கும் ஒன்றாக எழுந்து நிற்பது அவசியம்.

இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்தியதற்கு பல்வேறு தரப்பினரின் பங் களிப்பு அவசியமாக இருந்திருக்கிறது. குறிப் பாக பல்கலைக்கழக மாணவர்கள், மத தலை வர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் பங் கேற்று வெற்றியடைய வைத்திருக்கிறார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் அரசியல் கட்சிகளின் பங்கேற்பு போதுமானதாக இருந்திருக்கவில்லை. பொத்துவில் - பொலி கண்டி போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு உயர்வான நிலையில் இருந் தது. தற்போது உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் கட்சி அரசியலும், தேர்தல் அரசியலும் இதற்குள் ஓடும் நிலையால் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு போதுமான வகையில் இருக்கவில்லை. ஒன்று சுமந்திரன் - சாணக்கியன் தரப்பு வெளியில் நின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வெளியில் நின்றது. இந்த இரண்டும் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

வடக்கைவிட கிழக்கில் தான் புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தல் அதிகமாக இருந்தது. கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டதனால் அவர்களது பங்குபற்றுதலிலும் தொய்வு நிலை ஏற்பட்டது. அம்பாறையில் இருந்து வந்த பேருந்துகளின் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன. இறுதிநேரம்

> **தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம் பரிய பிரதேசங்கள், தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு**

பிரகடன உரையை வாசிக்கத் தயாரானபோது சிவப்பு - மஞ்சள் கொடிகளை சிலர் எரிக்க முற்பட்டனர். மாணவர்கள் அதனையும் தடுத்து நிறுத்தினர்.

பல்வேறு போதாமைகள் இருந்தாலும் கூட அண்மைய வரலாற்றில் இந்தப் போராட்டத்துக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்றே நாங் கள் கூறலாம்.

போராட்டம் என்று வரும் போது மூன்று விடயங்கள் முக்கியமானது. ஒன்று பேரணியும் மக்கள் திரளும் அவர்கள் எழுப்பும் கோஷ ங்களும், இரண்டாவது இறுதியாக நடக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மக்களின் தொகை மற்றும் அங்கு உரையாற்றுபவர்களின் கருத்துகள், மூன்றாவது இறுதிநாள் மேடையில் வைக்கப்படுகின்ற பிரகடனம்.

பேரணியின் மிகுந்த முக்கியத்துவம் அதன் பிரகடனம் தான் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும், அதன் வழிவரைபடம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் பிரகடனம் தெளி வாக வெளிக்காட்டியது. அரசியல் தீர்வு முயற் சிகள் நடந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இப்பிரகடனம் மிகவும் முக்கியமானது. அதி களவில் தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு யோச னையை பிரகடனம் ஒத்திருந்தது எனலாம். பிரகடனத்தில் நான்கு விடயங்கள் மிகவும் முக்கியமானவை.

முதலாவது, அரசியல் தீர்வின் கோட் பாட்டு அடிப்படைகளாகும். தேச அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கோட்பாட்டு அடிப்படைகளை பிரக டனம் வெளிப்படுத்தியிருந்தது.

இரண்டாவது, சமூக ஒப்பந்தமாகும். இந்த சமூக ஒப்பந்தம் தமிழ் மக்கள் பேரவை யின் தீர்வு யோசனையிலும் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த சமூக ஒப்பந்தத் தின் போது கோட்பாட்டு அடிப்படைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டிருந்தது. இக் கோட்பாட்டு அடிப்படைகள் திம்பு மாநாட்டிலும் தமிழ்த் தரப்பினால் வெளிப் படுத்தப்பட்டது.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம் பரிய பிரதேசங்கள், தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்பனவே திம்பு மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாட்டு அடிப்படைகளாகும்.

மூன்றாவது, அரசியல் தீர்விற்கான வழி வரைபடமாகும் இதில் பிரதானமாக சர்வதேச மத்தியஸ்தம் கால அட்டவணை, உடனடிப் பிரச்சினைகள், புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகள் உட்பட சிவில் சமூகம் பிரதிநிதிகளை பேச்சு வார்த்தை செயற்பாட்டில் உள்ளடக்குதல், பொதுவாக்கெடுப்பு, முஸ்லீம்கள், மலையக மக்கள் என்போருக்கான அரசியல் தீர்வு என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.

உடனடிப்பிரச்சினைகளுக்குள் ஆக்கிரமிப் புகளை நிறுத்துதல், சிங்கள குடியேற்றங்களை அகற்றுதல், அரசியல் கைதிகளின் விடுதலை, இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணை, பயங் கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், நினை வேந்தல்களுக்கான அச்சுறுத்தல்களை அகற்று தல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்தில் போதாமைகள் இருந்தன என்பது ஒரு விடயம். ஏனெனில் மாணவர்கள் தான் போராட்டத்தை முன்னெடுத் தார்கள். மாணவர்களின் போராட்டத்தை நடாத் தும் கொள்ளளவு என்பது எல்லைக்கு உட்பட் டது. படிக்க என்று வந்த மாணவர் ஒன்றிய பிரதி நிதிகள் காலத்துக்கு காலம் மாறிய வண்ணம் இருப்பார்கள். அவர்கள் நிறுவன ரீதியாக இருப்பதனால் போராட்டத்துக்கு முன்னுக்கு

நிற்பார்கள். ஆனால் அவர்கள் தனித்து போராட்டத்தை நடாத்த முடியாது. ஆகவே சிவில் சமூக அமைப்புகளுடன் வலுவாக இணைந்து கட்டமைப்புகளை உருவாக்கி போராட்டத்தை ஒருங்கிணைத்து நடாத்தி இருக்கலாம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னின்று நடாத்தி இருந்தாலும் அதில் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொள்ளவில்லை என்கிற விமர்சனம் உண்டு. போராட்டத்தில் சகல மக்களையும் தேசமாக திரட்டுதல் என்பதிலும் பலவீனம் இருந்தது. சாவகச்சேரியில் மிகவும் சொற்பமானவர்களே ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். கிளிநொச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் ஒத்துழைத்த காரணத்தால் கூட்டத்தை ஓரளவுக்காவது திரட்ட முடிந்தது. ஒரு பிரதேசத்தை பேரணி கடக்கும் போது அந்த பிரதேசத்தில் உள்ளவர்கள் எல்லாம் அதில் கலந்து கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் தான் அந்தப் போராட்டம் வலுவாக இருக்கும். பொத்துவில் - பொலிகண்டி போராட்டத்தில் மக்கள் பெருமளவு தன்னெழுச்சியுடன் பங்கேற்கும் நிலை இருந்தது. இதில் அவ்வாறு இருக்கவில்லை.

இவ்வாறான குறைகள் இருந்தாலும் இந்தப் பேரணி தெற்குக்கும் உலகுக்கும் ஒரு பிரதான செய்தியை சொல்லி உள்ளது. அது, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுக்கான வழிவரைபடம் அம்மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுவும் ஆகும். இந்நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால் இந்த விடயங்களை தெற்கும் சர்வதேசமும் கணக்கில் எடுக்க வேண்டியது இன்றியமையாதது.

---

(10ஆம் பக்க தொடர்ச்சி)

தமிழருக்கு துன்புறுத்தல் மிரட்டல் ஊடாக மறுத்ததன் மூலம் மனித குலத்துக்கு எதிரான குற்றத்தைப் புரிந்துள்ளதாக அதில் வாதிடப்பட்டுள்ளது. இந்த மிரட்டல் காரணமாக சம்பந்தப்பட்ட ஈழத்தமிழர்கள் தமது சொந்த நாட்டை விட்டு ஓடி இங்கிலாந்தில் தஞ்சமடைய வேண்டி வந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஈழத்தமிழர்கள் இங்கிலாந்தில் தம்மை நோக்கி சிறிலங்கா அரச அதிகாரிகளால் தொடர்ந்து நடத்தப்படும் கண்காணிப்பு, பின்தொடர்தல் மற்றும் துன்புறுத்தல்களால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த குற்றங்கள் ICC அங்கத்துவ நாடாகிய இங்கிலாந்து எல்லைக்குள் செய்யப்பட்டுள்ளன என்பதனால் ICC தனது அதிகார வரம்பைப் பயன்படுத்த அனுமதிக்கிறது என்று இந்த சமர்ப்பிப்பு கூறுகிறது. ஈழத்தமிழர் சார்பாக ICCக்கு இதுபோன்ற சமர்ப்பிப்பு செய்யப்படுவது இதுவே முதல்முறை.

இலங்கையில் தொடர்ந்து இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் ஈழத்தமிழருக்கு சர்வதேச சமூகத்திடம் நீதி கோரி ஈழத்தில் இருக்கும் தமிழரும் புலம்பெயர்ந்த தமிழரும் HRC ஊடாகவும், ICC ஊடாகவும் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த முயற்சிகள் வெற்றியடைய வேண்டியது உலகளாவிய மனித குலத்தில் நீதியும் நியாயமும் பேணப்படுவதற்கு மிகவும் அவசியமானவை. ஈழத்தமிழரின் இந்த முயற்சி எந்தவோர் அடக்குமுறை அரசும் தான் செய்பவற்றுக்கு பொறுப்புக்கூறியே ஆக வேண்டும் என்ற தத்துவத்தை நிலைநாட்டும் பாரிய பணியில் ஒரு சிறிய அங்கம் என்பதை சர்வதேசத்தினரும் உணர வேண்டும். ஆகவே இந்த முயற்சிக்கு தம்மாலான உதவிகள் அனைத்தையும் அவர்கள் வழங்க வேண்டும்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)

அவ்வாறு செய்வது புத்தரின் போதனைக்கும் மற்றும் நடைமுறைக்கும் ஏற்பவும் இருந்திருக்கும். ஆனால் அந்த விடயம் அவர்களின் சீர்திருத்த வரம்பிற்கு அப்பாற்பட்டதாக கருதப்பட்டது. இவ்வாறான ஒரு சமரச ஏற்பாட்டுக்கு மூன்று நிக்காயாக்களும் தங்களின் மறைமுக சம்மதத்தை வழங்கியதாகத் தென் படுகிறது.

ஓர் அறைக்குள் யானை ஒன்று இருந்தாலும் அங்கிருப்பவர்கள் அதன் மீது கவனம் செலுத்தாமல் இருப்பது போன்றே மகாசங்கத்தினுள் சாதிய வேறுபாடு என்பது அன்றும் இன்றும் இருந்து வருகிறது. அது இருப்பது அனைவருக்கும் தெரியும், ஆனால் யாரும் அதைப் பற்றி பேசுவதில்லை. அது ஓரிரு நூற்றாண்டுகளாகத் தான் அங்கு இருக்கிறது. இந்த உண்மையை அறியாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அது இருப்பதாக பலர் கருதுகின்றனர். இதனைப் பற்றிக் கதைப்பது அநாகரீகமாக இருந்தாலும் இதனைப் பற்றிக் கதைப்பது ஒன்றும் தடை செய்யப்பட்ட விடயமல்ல. ஒருவருடைய அழுக்குத் துணியை பொது இடத்தில் கழுவுவது என்பது இங்கு பொருத்தமான பழமொழியாக இருக்கலாம்.

19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய பௌத்தம், ஜிம் க்ரோ சட்டங்களை நியாயப்படுத்த அமெரிக்காவின் தெற்கில் உள்ள வெள்ளை இனவாதிகளால் பயன்படுத்தப்பட்ட கோட்பாட்டைப் போன்ற ஒன்றை உருவாக்கிக் கொண்டது. அதாவது சமமான உரிமை ஆனால் தனியாக பிரிக்கப்பட்டு இருத்தல் என்ற ஒரு அமைப்பை உருவாக்கியது. கொவிகம சாதியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உயர் பதவி வழங்கும் வழக்கத்தை கண்டிய மன்னர்களும் உயர்சாதித் துறவிகளும் செயல்படுத்தி இருந்தால், அது புத்தரின் போதனைகளின் அடிப்படைக் கொள்கைகள் ஒன்றிலிருந்து மோசமான விலகல் என்று சொல்லி அதற்கு எதிராக ஒரு உட்கிளர்ச்சி வெடித்து இருக்கும். ஆனால் கொவிகம அல்லாத சாதிகள் தங்களுக்கே உரித்தான நிக்காயாக்களை உருவாக்க முடியும் என்று அனுமதிக்கப்பட்டதால் (துறவிகள் மற்றும் பாமர மக்கள் மத்தியில்) ஒரு சிக்கலான அமைப்பு உருவாகி திடப்படுத்தப்பட்டது. எனவே, சங்கத்திற்குள் சாதிப்பிரிவுகள் உயிருடன் இருக்கும் அதே வேளையில், அந்த ஒழுங்கை சீர்திருத்த விரும்புபவர்கள் கூட, இந்தப் பிரச்சினையைப் பற்றி பொதுவெளியில் கதைக்கவில்லை.

அனகாரிக தர்மபால கோவிகம அல்லாத சாதியிலிருந்து வந்தவர். ஆனால் சாதிப் பிரிவினைகள் மகாசங்கத்தின் கட்டமைப்பில் உள்ளடக்கப்படுவதால் ஏற்படும் பௌத்த கோட்பாடுகளின் சிதைவை அவர் புறக்கணிக்க முடிவெடுத்தார். மாறாக பல எதிரிகள்/அச்சுறுத்தல்களை உருவாக்குவதன் மூலம் அனைத்து சிங்கள-பௌத்தர்களையும் ஒன்றிணைக்கும் வழியை அவர் தெரிவு செய்தார். 19 ஆம் நூற்றாண்டின் பௌத்த மறுமலர்ச்சியில் சிறுபான்மையினரைத் தாக்கும் கோட்பாட்டை உள்நுழைப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். அதுவரை காலமும் மறைமுகமாக இருந்த இந்த தப்பெண்ணத்தை வெளிப்படையாகப் பேசக் கூடிய ஒன்றாக்கினார்.

அவர் பிரித்தானியாவுக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தின் நாயகனாகக் கருதப்பட்டாலும், அவரது கோபத்தின் முக்கிய கவனம் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அல்ல. ஆங்கிலேயர்கள் மீதான அவரது தாக்குதல்கள் அரசியல் என்பதை விட கலாசாரம் சார்ந்ததாகவே இருந்தன.

அக்கால இலக்கிய ஜாம்பவான்களாக இருந்த பியதாச சிறிசேன மற்றும் ஜோன் டி சில்வா ஆகியோருடன் சேர்ந்து, சுதந்திரம் என்பது காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபடுவது மட்டுமல்ல, சிறுபான்மை இருப்பு மற்றும் அன்னிய மத-கலாசார தாக்கங்களிலிருந்தும் விடுதலை பெறுவது என்று அனகாரிக தர்மபால விளக்கினார். இந்த விளக்கத்தின்படி முதன்மையான எதிரி பிரித்தானிய காலனித்துவவாதிகள் அல்ல. தமிழர்கள், இந்திய-தமிழர்




கள், முஸ்லிம்கள், மலாய்க்காரர்கள், பறங்கிகள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரே முதன்மையான எதிரிகள். நிலத்தின் உண்மையான உரிமையாளர்களுக்கு மேலாக இந்த அன்னிய சமூகங்களை ஆதரிப்பது தான் ஆங்கிலேயர்கள் செய்த முக்கிய பாவம். அந்த பாவச் செயல் தான் பிரித்தானியர்களின் சுரண்டல் நடவடிக்கைகளை எளிதாக்கியது. ஏனைய விடயங்களில் செல்வாக்கு செலுத்துதலை எளிதாக்கியது. இவ்வாறாக அவர் கருதினார்.

சாதியை நிராகரித்த ஒரு மகாசங்கம் (புத்தர் செய்தது போல்) இத்தீவில் சாதிய ஒடுக்குமுறையை இல்லாது ஒழித்திருக்க முடியும். இலங்கையும் தனது சொந்த டாக்டர் அம்பேத்கர்களை உருவாக்கி இருக்க முடியும். தோட்டத் தமிழர்கள் உட்பட அனைத்து இனக்குழுக்களின் ஒடுக்கப்பட்ட சாதியினரையும் அணுகியிருக்க முடியும். ஒற்றை இனவாத மற்றும் சிறுபான்மைக்கு எதிரான ஒரு பௌத்தமாக இல்லாத ஒரு பௌத்தம் ஒரு புதிய இலங்கை தேசத்தின் பிணைப்பு முகவராக மாறியிருக்கும். சிங்கள பௌத்தம் என்பதில் சிங்களத்தை நீக்கி இருந்தால் பௌத்த சாசனம் குறிப்பிடத்தக்க அளவுக்கு தமிழ்க் கூறுகளைக் கொண்டிருக்கக்கூடும். அது புத்தர் விரும்பிய பௌத்தமாக இருந்திருக்கும். ஒருவரின் பிறப்பு எப்படிப்பட்டது என்பதைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு மனிதனுக்கும் புகலிடமாக இருந்திருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு தீவில் 'தனிச் சிங்களம்' என்ற சட்டம் வெற்றி பெற்றிருக்க முடியுமா? அத்தகைய நிலத்தில் கறுப்பு ஜுலை நடப்பது சாத்தியப்பட்டிருக்குமா?

புத்தர் தன்னுடைய போதனைகள் அதன் பழமையான வடிவத்தில் நிலைத்திருக்கும் ஒரே இடமாக இலங்கை இருக்கும் என ஆசீர்வதித்ததாக சொல்கிறது மகாவம்சத் தொன்மம். ஆனால், இந்த தொன்மம் நிலத்தை மையமாகக் கொண்டது, இனத்தை மையமாக கொண்டது அல்ல. இதன் விளைவாக, ஓர் அரச பரம்பரையில் இருந்து வருதல் மற்றும் பௌத்தத்தை கடைப்பிடித்தல் என்பன மட்டுமே இலங்கையில் அரசாட்சிக்கான முக்கிய தகுதிகளாக இருந்தன. எந்த இனத்திலிருந்தோ அல்லது எந்த நிலத்தில் பிறந்தவர் என்பதோ முக்கியமாக கொள்ளப்படவில்லை. கண்டியின் நாயக்க மன்னர்கள் பல முன்னோடிகளைக் கொண்டிருந்தனர். பொலன்னறுவையின் (12 ஆம் நூற்றாண்டு) மன்னர் நிசங்க மல்ல போன்றவர்களும் அதில் அடக்கம். அவர் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் இந்தியாவில் பிறந்தவர் என்றும் அவரால் சொந்தமாக பொறிக்கப்பட்ட பாறைக் கல்வெட்டுகள் சொல்கின்றன.

மதத்துடன் இனத்தைச் சேர்ப்பது 19ஆம் நூற்றாண்டில் கட்டமைக்கப்பட்ட ஒன்றாக தோன்றுகிறது. அனகாரிக தர்மபாலவும் அவரைப் போன்றவர்களும் சிங்களத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க முடியாத ஒரு அடையாளமாக இணைத்து அதை தேசம் என்று அழைத்தனர். இந்த தேசியக் கருத்தாக்கமானது, உணர்வுபூர்வமாகவும் முன்னோக்கத்துடனும் சிங்கள இனம் மற்றும் பௌத்த மதம் இல்லாத எவரையும் புறம் தள்ளியது அல்லது ஒதுக்கியது. இது மேலெழுந்த வாரியாக ஒரு படிநிலை அமைப்பை நிறுவுவதாகவும் அடிப்படையில் கொலைகாரத்தனமானதாகவும் இருந்தது.

சிங்கள-பௌத்தர்களே இத்தீவின் உண்மையான உரிமையாளர்கள் என்ற வரலாற்றுத் திரிபுக் கூற்றுத் தான் இந்தக் கருத்தாக்கத்துக்கு அடிப்படையாக இருக்கிறது.

**அடுத்த இதழில் தொடரும்...**

# சிங்கள பௌத்தத்திடம்

# நாம் இழந்த நாடு...(பகுதி 1)





ஆங்கிலத்தில் திசரனீ குணசேகர (www.groundviews.org) தமிழாக்கம் : நிமிர்வு

> "நட்புறவுடன் வாழமுடியாவிட்டாலும் குறைந்த பட்சம் சகிப்புத்தன்மையுடன் இணைந்து வாழ உதவும் சில ஏற்பாடுகளை உருவாக்குவதே எங்களுக்கு முன்னால் உள்ள சவால்."
>
> -ஜவஹர்லால் நேரு

கறுப்பு யூலையின் போது கொலைகாரக் கும்பல்கள், தாம் பலியெடுக்க நினைத்த நபரின் இனத்தை நிர்ணயம் செய்ய முடியாமல் இருந்தால், பௌத்தத்தின் ஐந்து கட்டளைகளை பாளி மொழியில் சொல்லச் சொன்னார்கள். அல்லது இதிபிசோ பகவ என்ற மந்திரத்தை ஓதும்படி கட்டளையிட்டார்கள். (இந்த செயற்பாட்டில் இருந்த முரண்நகை மிகவும் கோரமானது. ஏனெனில் ஐந்து கட்டளைகளில் முதல் கட்டளையானது எந்த உயிரையும் கொல்லக்கூடாது என்ற உறுதி மொழியாகும். இடிபிசோ பகவ புத்தரின் ஒன்பது குணங்களைக் குறிப்பிடுகின்றது. 'அரஹாம்' என்பதில் தொடங்கும் அது வெறுப்பை ஒழிப்பதை உள்ளடக்கியது.) எந்தத் தமிழனும் பௌத்தனாக இருக்க மாட்டார் அல்லது ஒரு தமிழன் பௌத்தத்தின் அடிப்படைகளை அறிந்திருக்க மாட்டார் என்பது அந்த கும்பல்களின் அனுமானமாக இருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் பௌத்த மறுமலர்ச்சி புத்தரின் போதனைகளிருந்து இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் விலகிப் போனது. ஒன்று, கண்டிய மன்னர்களால் சங்கத்தின் மீது திணிக்கப்பட்ட சாதியப் பிரிவினையை அது ஏற்றுக்கொண்டு அதற்கு இடமளித்தது. இரண்டு, சிறுபான்மையினரை சந்தேகிக்கும், பயமுறுத்தும் மற்றும் விரோதிக்கும் ஒரு கண்ணோட்டத்தை வளர்த்துக் கொண்டு, சிங்கள இனக்குழுவுக்குள் அது தன்னைத் தானே அமிழ்த்திக் கொண்டது.

பௌத்த மறுமலர்ச்சி புத்தரின் போதனைகளுக்கு விசுவாசமாக இருந்திருந்தால், சுதந்திரத்தின் பின்னரான இந்த 75 வது ஆண்டை நாம் ஒரு வேறுபட்ட இலங்கையில் வாழ்ந்திருக்கலாம்.

19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த பௌத்த சீர்திருத்தவாதிகள் புத்த சாசனத்திற்குள்ளும் சிங்கள சமூகத்திற்குள்ளும் இருந்த சாதிய பிரச்சனையை தீர்த்து வைத்திருக்க முடியும். அதற்குரிய தேவை, வாய்ப்பு இரண்டும் இருந்தன.

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.02.2023 அன்று வெளியிடப்பட்டது.